Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 115/2025** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **காவேரி** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**19.05.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது புலியூரானில் குடியிருந்து பள்ளியில் கூலி வேலை செய்கிறேன். இவ்வழக்கில் இறந்துபோன முத்துராஜ் எனது கணவர் ஆவார். கடந்த 17.05.2024 ம் தேதி எனது மகள் ஆண்டுவிழாவிற்கு பொருட்கள் வாங்குவதற்காக எனது கணவர் எங்கள் ஊரிலிருந்து அருப்புக்கோட்டைக்கு TVS XL இரு சக்கரவாகனத்தில் காலை 11.00 மணியளவில் சென்றார். அன்று மதியம் சுமார் 1.00 மணியளவில் எங்கள் ஊர் தலைவரான சத்தியசீலன் எனக்கு போன் செய்து அவர் பெத்தம்மாள் கோவில் அருகில் சென்று கொண்டிருந்தபோது எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டதை பார்த்ததாக என்னிடம் தகவல் தெரிவித்தார். எனது கணவரின் இருசக்கரவாகனம் மற்றும் மற்றொரு இருசக்கரவாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக என்னிடம் தகவல் கூறினார். அப்போது எனது கணவரை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்துள்ளதாக என்னிடம் கூறினார். நான் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவருக்கு நெற்றியில் மட்டும் வெளிக்காயம் இருந்தது. எனது கணவரை தலைப்பகுதியில் ஸ்கேன் செய்து பார்த்துவிட்டு வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து மறுநாள் மருத்துவமனைக்கு வரும்படி கூறினார்கள். நாங்கள் வீட்டுக்கு சென்றவுடன் 18.05.2024 ம் தேதி அதிகாலை 1.00 மணிக்கு எனது கணவர்

வயிறு வலிப்பதாக என்னிடம் கூறினார். நானும் எனது உறவினர்களும் எனது கணவரை அழைத்துக்கொண்டு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அவர்கள் எனது கணவரை பரிசோதனை செய்துவிட்டு மருத்துமனைக்கு வருவதற்கு முன்பாகவே எனது கணவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனது கணவர் மதியம் மருத்துவமனைக்கு சென்றிருந்த போது வயிறு வலிப்பதாக எதுவும் கூறவில்லை, இரவில்தான் கூறினார். அதன் பின்னர் எனது கணவர் இறந்தபிறகு விபத்து சம்பவம் தொடர்பாக அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. **(புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** புகாரில் உள்ள விவரங்களை நான் சொல்ல சொல்ல எங்கள் ஊர் தலைவர் எழுதினார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியும் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது நீதிமன்றத்திற்கு என்னுடன் எங்கள் ஊர்த்தலைவர் வந்திருக்கிறார் என்றால் சரிதான். எனது கணவருக்கு மது அருந்தும் பழக்கம் இருக்கிறது என்றால் சரிதான் விபத்து நடந்த அன்று கோவிலுக்க காப்பு கட்டிருந்தார், அதனால் அவர் மது அருந்தவில்லை. விபத்து பற்றி எனக் குநேரடியாக தெரியாது என்ற காரணத்தினால் எங்கள் ஊர்த்தலைவரின் தூண்டுதலின் பேரில் எதிரி மீது பொய்ப்புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று எனது கணவர் தான் மதுபோதையில் அஜராக்கிரதையாக சாலை விதிகளை பின்பற்றாமல் வாகனத்தை ஓட்டி எதிரி மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றாலும், வழக்கு விபத்திற்க்கு எதிரி காரணம் இல்லையென்றாலும் சரியல்ல. எனது புகாரில் வீட்டில் கலந்துபேசி புகார் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளதால் எனது கணவருக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பின்யோசனையுடன் பொய்புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.